30th October 1958]

The Hon. Sri P. KAKKAN : அரசாங்கத்தினால் ஏற்படுத்தப் படும் ஹாஸ்டல்கள் ஹைஸ்கூல் உள்ள இடங்களிலேதான் இருக்கின்றன. இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்யச் சொல்லுகிறேன்.

Harijan Welfare School

* 730-D *Q.*—Sri P. U. SHANMUGAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன நல இலாகா புதிய பாடசாலைகள் இனி திறப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பது உண்மையா ?

(ஆ) காரணம் யாது ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) With a view to avoid segregation of Harijan boys and girls in separate schools and to bring together both Harijan and non-Harijan boys in common school, the Government decided not to open separate Harijan Welfare schools.

Sri P. U. SHANMUGAM : புதிய பாடசாலை திறக்கப்படா விட்டாலும் இருக்கிற பாடசாலை மூடப்படாமல் இருக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : இருக்கிற பாடசாலைகளைகூட இன்றைக்கு ஒரு சில விசேஷ காரணங்களினால் நிறுத்தும்படி நேர்ந்தாலும் நேரும்.

Inclusion of the term "Harijan," in the list of Scheduled Castes.

* 730-E *Q.*—Sri P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) " ஹரிஜன் " என்ற பெயர் சட்டரீதியாக கவர்மெண்டால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) " ஹரிஜன் " என்ற பெயரை ஷெடியூல் வகுப்பினர்களுடைய ஜாபிதாவில் சேர்ப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறதா ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) No, Sir.

Sri A. GOVINDASAMY : அந்த லிஸ்டில் ஹரிஜன் என்று எழுதினால் ஒப்புக்கொள்வதில்லை. ஷெட்யூல் வகுப்பு இன்ன பிரிவு என்று எழுதவேண்டியிருக்கிறது. ஹரிஜனன் என்று காந்திஜீ வைத்த பெயர் எழுதினாலே போதும் என்று சர்க்கார் உத்திரவிடுவார்களா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லும் விஷயம் அரசாங்கத்திற்கு தெரியும். இருந்தாலும் அரசியல் அமைப்பில் இப்படி அமைந்துவிட்டதனால் இதை மாற்றுவதற்கு முடியவில்லை.

Sri P. G. MANICKAM : ஹரிஜனன் என்ற பெயரில் தாழ்த்தப் பட்டவர்கள் அத்தனை பேரும் வந்துவிடுகிறார்கள். ஷெட்யூல் காஸ்ட் என்பது ஆங்கிலப் பெயர். ஆகவே ஹரிஜனன் என்று போட்டால் போதும் என்று மத்திய சர்க்காரைக் கலந்துகொண்டு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN : நான் முன்பே சொன்னேன். இந்தமாதிரி மாற்றம் செய்யவேண்டுமென்றால் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும். ஆகவே இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் ஒன்றும் செய்வதிற்கில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

[30th October 1958

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஷெட்யூல் என்பதற்கு அனுபந்தசாதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஆங்கில வார்த்தை. இது இல்லையென்ற காரணத்தினால் பலவிதமான தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகையால் ஹரிஜனன் என்ற பெயரை ஒப்புக்கொள்ள சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சிபாரசு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்கிற யோசனை சரி. நானே அரசியல் நிர்ணய சபையின் பிரதிநிதியாக இருந்தேன். அப்போது ஹரிஜனன் என்ற பெயரைப் போடவேண்டும் என்று சொல்லிப் பார்த்தேன். எல்லோரும் பொதுவாகப் போட்டுவிட்டார்கள். அது அப்படியே இருக்கிறது. நாம் ஒன்றும் செய்வதிற்கில்லை.

SRI K. VINAYAKAM : எந்த எந்த சாதிகள் எந்த எந்தப் பிரிவுகளில் போடவேண்டும் என்கிற உரிமை மாகாண சர்க்கார் களுக்குத்தான் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு இல்லை. ஹரிஜனன் என்ற சாதி ஆதித்திராவிடர்கள் அத்தனை பேருக்கும் பொதுவாக நம் ராஜ்யத்தில் இருக்கிறது. ஆகவே இதை ஹரிஜனன் என்று போட்டால் போதும் என்று செய்வதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : நான் முன்பே சொன்னேன். அரசியல் அமைப்பில் இருப்பதை மாற்றுவதற்கில்லை. இதற்கு மாகாண சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to explain the position Sir. தீண்டப்படாதவர்கள் எல்லோருக்கும் ஹரிஜனங்கள்—கடவுளின் மக்கள்—என்ற பெயர் காந்திஜீ வைத்தார்கள். ஹரிஜனங்கள் என்று தனிப்பட்ட சலுகை கொடுக்கப்படுகிறது. ஆகையால் அவர்கள் தீண்டப்படாத வர்களில் எந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்று தெளிவாகத் தெரிந்த பிறகே சலுகை கொடுக்கும்படி இருக்கிறது. அது தெரிந்த பிறகுதான் நிர்ணயிக்க முடியும். அதன் காரணமாக இந்தச் சங்கடம் ஏற்படுகிறது. ஆகவே ஹரிஜனங்கள் என்றாலும் தீண்டப்படாதவர்களில் எந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிடுவதில் அனுகூலம் இருக்கிறது என்பதனால் அப்படி வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Educational concessions to Viswakarama students

* 719 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIYAR : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கன்னியாகுமரி ஜில்லாவில் கம்மாள (விஸ்வகர்மா வகுப்பு) மாண வர்களுக்கு 1957–58-ம் வருஷத்தில் அளித்த கல்வி சலுகையை 1958–59 வருஷத்தில் நிறுத்தப்பட்டதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The fee concessions granted to students belonging to Kammala (Viswakarma) Community in Kanyakumari district during 1957–58 have not been discontinued.

SRI A. R. SUBBIAH MUDALIYAR : விஸ்வகர்மா வகுப்பு குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகை 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று முதல் மந்திரி அவர்களிடம் மகஜர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் சலுகை மேற்கொண்டும் கொடுக்கப்படவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the report I have received from the Director of Public Instruction is that the students belonging to the Kammala community (Viswakarma community)